
# முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு:

## அரசியல் சட்ட அவையில் நடந்தது என்ன?



அ.மார்க்ஸ்

# முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு:

## அரசியல் சட்ட அவையில் நடந்தது என்ன?

அ. மார்க்ஸ்

கருப்புப் பிரதிகள்

முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு:
அரசியல் சட்ட அவையில் நடந்தது என்ன?

அ. மார்க்ஸ்

முதற்பதிப்பு : டிசம்பர் 6, 2004

வெளியீடு

கருப்புப் பிரதிகள்
45 A, இஸ்மாயில் மைதானம்,
லாயிட்ஸ் சாலை, சென்னை - 5.

மின்னஞ்சல் : karuppu2004@rediffmail.com ✆ 94442 72500

© ஆசிரியர்

விலை ரூ.12.00

## கருப்புப் பிரதிகள்...

அரசியல் சட்டத்தை என்னைக் கொண்டுதான் எழுதினார்கள், ஆனாலும் அதை எரிக்க வேண்டுமானால் முதல் ஆளாக நானிருப்பேன் என்கிற கருத்துப்பட அண்ணல் அம்பேத்கர் மொழிந்துள்ளார். பெரியார் அரசியல் சட்டத்தை எரித்தே காட்டினார். அது சாதி காப்பாற்றுவதாக இருக்கிறது என்பது அவர் சொன்ன காரணம்.

நமது அரசியல் சட்டம் சாதியை மட்டுமல்ல, இந்து மத நலன் களையும் முன்னிறுத்துகிறது. சிறுபான்மையினருக்கு அரசியல் சட்டத்தின் மிகப் பல துரோகங்கள் இழைக்கப்பட்டுள்ளன. இட ஒதுக்கீடு பிரச்சினையில் இழைக்கப்பட்ட அநீதிகளை இக்குறுநூல் விளக்குகிறது.

ஆட்சி மொழிப் பிரச்சனையிலும் இந்துஸ்தான், உருது ஆகியன புறக்கணிக்கப்பட்டதன் மூலம் முஸ்லிம்களுக்கு, குறிப்பாக வட இந்திய முஸ்லிம்களுக்குப் பெருந்துரோகம் இழைக்கப்பட்டது. பொது சிவில் சட்டம் பற்றிய 44வது பிரிவு அரசியல் சட்டத்தில் இணைக்கப் பட்டது முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட இன்னொரு அநீதி.

மதச் சுதந்திரம் பற்றிய 25(1)வது பிரிவு மதநம்பிக்கைகளைப் பிரச்சாரம் செய்ய உரிமை அளித்தபோதிலும் பிற அடிப்படை உரிமை களைப் போல இது நிபந்தனையற்று வழங்கப்படவில்லை. ‘பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்காதவரை’ என்கிற நிபந்தனை யுடனேயே மதப் பிரச்சார உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனையைச் சுட்டிக் காட்டியே பல மாநிலங்கள் மத மாற்றத் தடைச் சட்டங்களை உச்சநீதிமன்றத்தில் நியாயப்படுத்தியுள்ளன. உச்சநீதி மன்றமும் அதை ஏற்றுக் கொண்டது.

இட ஒதுக்கீட்டைப் பொருத்தவரை அட்டவணைச் சாதியினருக்கான இடஒதுக்கீடு இந்து அல்லாதவர்களுக்கு மறுக்கப்பட்டு இடப்பட்ட 1950ம் ஆண்டு குடியரசுத் தலைவரின் ஆணை சிறுபான்மையினருக்கு எதிராக இழைக்கப்பட்ட மற்றொரு பெரிய அநீதி. இன்று இந்த அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கிறிஸ்தவர்களும் முஸ்லிம் களுமே. கோபால் சிங் ஆணையப் பரிந்துரையின்படி இந்த ஆணையின் மத நிபந்தனை நீக்கப்பட வேண்டும்.

இந்தக் கட்டுரையில் சுட்டிக் காட்டியிருப்பதுபோல இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும் 15(4), 16(4) பிரிவுகளில் ‘வகுப்புகள்’ என்பதோடு ‘மற்றும் சிறுபான்மையினர்’ என்பது இணைக்கப் பட வேண்டும். இதற்குரிய வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

இரட்டை வாக்குரிமை, தொகுதி ஒதுக்கீடு, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு, அமைச்சரவையில் ஒதுக்கீடு இவற்றைக் கண்காணித்து உரிய

நடவடிக்கை எடுக்க மத்திய மாநில அரசுகளில் அதிகாரிகளை நியமித்தல் முதலிய கோரிக்கைகளைச் சிறுபான்மையினர் சார்பாக அரசியல் சட்ட அவையில் வலியுறுத்திய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாஹிப் உள்ளிட்ட 'சென்னைக் குழுவினர்' மற்றும் இதர சிறுபான்மையினரின் பிரதிநிதிகளை நாம் இன்று நன்றியுடன் நினைவுகூர வேண்டியுள்ளது. இந்தக் கோரிக்கைகள் இன்றும் கோரிக்கைகளாகவே உள்ளன. அரசியல் சட்ட அவையில் நிகழ்ந்தது போலன்றி சிறுபான்மையினர் ஒத்த குரலில் இவற்றை ஒலிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது.

சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதில் தடையாக உள்ள இன்னொரு அம்சம் உச்சநீதிமன்றம் வரையறுத்துள்ள உச்ச வரம்பு. அதாவது இட ஒதுக்கீடு 50 சதத்தைத் தாண்டக் கூடாது என்கிற எல்லை. இந்த வரம்பால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பிரிவினரும் இணைந்து உரிய அரசியல் சட்டத் திருத்தம் மூலம் இந்தத் தடையை நீக்குவதற்குப் போராட வேண்டும்.

இந்து மத உடலாக நமது அரசியல் சட்டத்தை உருவாக்கியுள்ள அரசியல் சபை பிதாமகன்களின் யோக்கியதையை இப்பிரசுரத்தின் மூலம் அ. மார்க்ஸ் அம்பலப்படுத்தியுள்ளார்.

இரும்பு கூட துருவேறிக் கரைந்துவிடும். ஆனால், நமக்கெல்லாம் பாடப் புத்தகங்களின் வாயிலாக 'உலோக மனிதனாக' முன்னிறுத்தப் பட்ட மனிதாபிமானமற்ற மாண்புமிகுவான படேலின் 'வித்தியாசங்களை' அழிக்கும் வகையிலான மிரட்டல்கள். இன்றைக்கு வீதிக் கொலைச் செய்யும் ஆர்.எஸ்.எஸ்.காரனின் வார்த்தைகளுக்கு ஒப்பானவை. இவற்றையும் இவற்றிற்கு முன்பு மௌனமாகிப் போன முஸ்லிம் பிரதி நிதிகளில் சமூக உளவியல் பாங்கையும் நுட்பமாக ஆங்கிலத்தில் மட்டுமே சாத்திய மாகக்கூடிய விசயங்களை அ. மார்க்ஸ் தருகிறபோது நமது மனம் நெகிழ்கிறது. இவருடைய இந்துத்துவம் தொடர்பான நூல்களில்தான். தேசப்பிரிவினையை முதலில் முன் வைத்தவர்கள் இஸ்லாமியர்களல்ல இந்துத்துவவாதிகள்தான் என்பதும், இட்லர் முசோலினியுடனான இந்துத்துவத் தொடர்புகளும் அம்பலப்படுத்தப் பட்டன. அவருக்கு பாசிச எதிர்ப்பாளர்கள் என்றென்றும் நன்றியுடைய வர்களாக இருப்பர்.

இக்கட்டுரை 'சமநிலைச் சமுதாயம்' இதழில் மூன்று மாதங்கள் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டது. அதன் ஆசிரியர் குழுவிற்கும் பின்னிணைப் பாக உள்ள ஆந்திர மாநில உச்சநீதிமன்றத் தீர்ப்பு தொடர்பான கட்டுரையை வெளியிட்ட 'புதிய காற்று' இதழாசிரியர்களுக்கும் எம் நன்றிகள்.

நூலாக்கத்தில் உதவி புரிந்த ஸ்ரீதேவி, அமீர் அலி, ஜெம் கிராபிக்ஸ் சாதிக் பாட்சா, அய்யனார், செல்வா, அமுதா எல்லோருக்கும் நன்றிகள்.

## 1

## முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த வார்த்தை விளையாட்டு

முஸ்லிம்களுக்கு அரசுப் பணிகளில் 5 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் ஆணையை ஆந்திரப் பிரதேச அரசு சென்ற ஜூலை 12 (2004) அன்று வெளியிட்டது. ஜூலை 22 அன்று ஆ.பி. உயர்நீதிமன்றம் அந்த ஆணையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டது. இதற்கிடையில் நாம் எதிர்பார்த்தது போல இந்துத்துவவாதிகள் இந்த உத்தரவைக் கண்டித்தனர். எதிர்த்து வழக்குகள் போட்டனர். (இந்துத்துவவாதிகள் தவிர இந்த ஆணையை எதிர்த்த ஒரே அமைப்பு ஆந்திர மாநில பி.யூ.சி.எல். இதுகுறித்து வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.) என்ன மாதிரிக் கண்டித்தனர்? 'தேசவிரோதம்' என்றது பா.ஜ.க., 'பிரிவினைத் தன்மையுடையது, தேச நலன்களுக்கு எதிரானது' என்றார் வெங்கையா (ஜூலை 18). 'அரசியல் சட்டத்திற்கு எதிரானது, சட்டவிரோதமானது' என்றார் வாஜ்பாயி (ஜூலை 20).

ஜூலை 21ந்தேதி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் ராஜ்யசபை உறுப்பினரும் பா.ஜ.க.வின் 'அறிவுத்தொட்டி'யின் (Think Tank) தலைவரு மான பல்பிர் புன்ஜ் எழுதிய கட்டுரை வெளியாகியது. 1909ல் மின்டோ-மார்லி சீர்திருத்தத்தில் அடிப்படையில் முஸ்லிம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி (Separate electorat) அளிக்கப்பட்டு நடைமுறையில் இருந்ததென்பது 1947 தேசப் பிரிவினைக்கு ஒரு முக்கிய அடிப்படையாக இருந்ததெனத் தொடங்கும் இக்கட்டுரை தொடர்ந்து உமிழும் விஷக் கருத்துக்கள்:

1. தேசப் பிரிவினைக்குப் பிறகு மத அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்றொரு கருத்தொருமிப்பு இங்கே கடைபிடிக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேச ஆணை இதற்கு எதிரானது.

2. முஸ்லிம்கள் தம்மை அல்லாஹ்வின் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆறு நூற்றாண்டுகள் ஆண்ட சுல்தான்களின் பரம்பரையில் வந்தவர்கள் என்றும் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். 1948 வரை ஹைதராபாத்தில் நிஜாம்களின் ஆட்சி நடைபெற்று வந்துள்ளது. இன்று 5 சதவீத இட ஒதுக்கீட்டிற்காக அவர்கள் கெஞ்சுவது முரணாக இல்லையா?

3. 65 சத முஸ்லிம்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். 1991ஆம் ஆண்டு கணக்குப்படி அவர்களில் 18 சதம் பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அதிலும் பெண்கள் நாலே சதம்தான். அதே சமயத்தில் பிற சமூகத்தினரில் 44 சதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றெல்லாம் ஆந்திர அரசு சொல்கிறது. நான் இதை மறுக்கவில்லை. ஆனால், 5 சத இட ஒதுக்கீடு இதைச் சரிசெய்து விட முடியுமா? இதற்கெல்லாம் காரணம் அவர்கள் கட்டுப்பாடின்றிக் குடும்பத்தைப் பெருக்குவதுதானே?

இவை அனைத்தும் அபத்தங்கள் என்பதை நாம் அறிவோம். முஸ்லிம்கள் மத்தியில் மக்கள் தொகை அதிகரிப்பு வீதம் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது குறைந்து வருகிறது என்பதே சமீபத்திய மக்கள் தொகை கணக்குகள் தெரிவிக்கும் செய்தி. தவறான கணக்கீடு களின் அடிப்படையில் இந்துத்துவச் சார்புடைய சில அதிகாரிகள் முஸ்லிம் மக்கள் தொகை அதிகரித்து வருவதாக அறிவித்தது இன்று அம்பலமாகியுள்ளது. அரசுத் தவறைத் திருத்திக்கொண்டுள்ளது. நிஜாம்களின் ஆட்சியில் கூட இந்துக்கள் வளமாக வாழ்ந்துள்ளனர். ஏழை முஸ்லிம்கள் ஏழைகளாகவேதான் இருந்துள்ளனர் என்பதே மேற்குறித்த தரவுகளிலிருந்து ஒருவர் பெறக் கூடிய செய்தி. கிடக்கட்டும். பல்பீர் முன் வைக்கும் முதல் வாதத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம். சுதந்திரத்திற்குப் பின் மத அடிப்படையில் இடஒதுக்கீடு கூடாது என்று ஒரு கருத்தொருமிப்பு இருப்பது உண்மையா? வாஜ்பேயி சொல்வதுபோல முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு செய்வது சட்ட விரோதமானதா? நிச்சயமாக இல்லை. மாநிலத்திலுள்ள மொத்த மக்கள் தொகையில் 22 சதமாக உள்ள கேரள முஸ்லிம்களுக்கு 12 சத ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது. ஆண்டு வருமானம் 2.5 லட்சத்திற்கு மீறக்கூடாது என்பது மட்டுமே நிபந்தனை. மக்கள் தொகையில் 12 சதமாக உள்ள கர்நாடக முஸ்லிம்களுக்கு 1994 முதல் 4 சத ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. அகில இந்திய அளவில் கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்படுவதே உண்மை.

நமது அரசியல் சட்டத்தின் 341ஆவது பிரிவு மத அடிப்படையில் இடஒதுக்கீட்டில் வேறுபாடுகள் காட்டவில்லையாயினும், பட்டியல் சாதியினருக்கு (SC/ST) அதில் தனியே இடஒதுக்கீடு அளிக்கப்பட்ட தாயினும், யார் யாரெல்லாம் பட்டியல் சாதியில் அடங்குவர் என்பதை அது வரையறுக்கவில்லை. குடியரசுத் தலைவரின் ஆணையின் மூலம் அது வரையறுக்கப்பட வேண்டும் என்று அப்பிரிவு கூறுகிறது. இதன்படி 1950ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் அரசியல் சட்ட ஆணை (எண் 19) இடப்பட்டது. சட்ட அமைச்சகத்தின் குறிப்பறிவிப்பும் (SRO-385/ ஆகஸ்டு 10, 1950) வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பின் மூன்றாவது பத்தி, இந்து அல்லாதவர்களுக்கு இது பொருந்தாது எனத் தெளிவு படுத்தியது.



இதனடிப்படையில் (SC/ST) இட ஒதுக்கீட்டிற்கு முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர், புத்தர்கள் ஆகியோர் தகுதியற்றவர்கள் ஆயினர். ஆக மத அடிப்படையிலேயே (SC/ST) இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. பின்னர் 1956இல் சீக்கியர்களும் 1990இல் புத்தர்களும் இதில் உள்ளடக் கப்பட்டனர். ஆக இந்த உரிமை இன்று முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர் களுக்கும் மட்டுமே மறுக்கப்பட்டுள்ளது. மத மாற்றத்திற்குப் பின்னும் தீண்டாமையில் உழல நேர்ந்துள்ள தலித் கிறிஸ்தவர்கள் இதில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக நியமிக்கப்பட்ட கோபால் சிங் ஆணையம் குடியரசுத் தலைவரது ஆணையில் பிற மதத்தினரை ஒதுக்கும் இப்பகுதியை நீக்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. வி.பி. சிங் அரசு இதனை ஏற்றுக்கொண்டபோதிலும் இதுவரை இந்த அநீதி நீக்கப்படவில்லை.

மீண்டும் மாநில அரசுகள் அளிக்கும் இட ஒதுக்கீட்டிற்கு வருவோம். அரசியல் சட்டத்தின் 15(4) ஆவது பிரிவு குறிப்பான சில மக்கள் பிரிவினரின் முன்னேற்றம் கருதி சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்குகிறது. 16(4) ஆவது பிரிவு ஏதேனும் ஒரு பின் தங்கிய பிரிவினர் அரசுப் பணிகளில் போதுமான அளவு பிரதிநிதித்துவம் பெற்றிருக்கவில்லையானால் அதனை ஈடுகட்டுவதற்குரிய ஒதுக்கீட்டுச் சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்குகிறது.

இதுகுறித்த அரசியல் சட்ட அவை விவாதம் இங்கே கருதத் தக்கது. 16(4)ஆவது பிரிவைப் பொருத்தமட்டில் சிறுபான்மையினர் களுக்கு சிறப்பு இட ஒதுக்கீடு அளிக்கும் முகமாகவே அது முதலில் முன் வைக்கப்பட்டது. மதச் சிறுபான்மையினரைத் தவிர இந்துக்களில் உள்ள சில பிரிவுகளையும் கூட உள்ளடக்குமாறு சிறுபான்மையினர் என்ற சொல்லை நீக்கிவிட்டு வகுப்புகள் என்ற பொதுச் சொல்லைப் போட வேண்டும் என கே.எம். பணிக்கர் வற்புறுத்தினார். பின்னாளில், ஜனசங் கட்சியை உருவாக்கிய சியாமா பிரசாத் முகர்ஜி, ''சிறுபான்மை யினர் மற்றும் வகுப்புகள் என இருக்கலாமோ?'' என்றார். இதுகுறித்த துணைக்குழுவின் தலைவராக இருந்த சர்தார் படேல் ''வகுப்புகள் என்று சொன்னாலே சிறுபான்மையினரும் உள்ளடங்குவர்'' என்று கூறினார். தொடர்ந்து நடைபெற்ற விவாதம்:

**பிராங்க் அந்தோணி :** வகுப்புகள், சிறுபான்மையினர் என இரண்டையும் சேர்த்து சொல்வதில் உங்களுக்கு என்ன மறுப்பு? வகுப்புகள் என்பது பட்டியல் வகுப்புகளையும் உள்ளடக்கிவிட்டுப் போகிறது.

**ராஜாஜி :** போதுமான அளவிற்கு (அரசுப் பணிகளில்) பிரதிநிதித்துவம் பெறாதவர்கள் என்றால் அது எல்லோரையும் தான் உள்ளடக்கு கிறதே?

**பிராங்க் அந்தோணி :** சட்டப்பூர்வமாகவும் வழமையிலும் ஏற்புப் பெற்ற சொற்களைக் கையாள்வதற்கு ஏன் வெட்கப்படுகிறீர்கள்? தெளிவாகக் குறிப்பிட்டுவிடலாமே.

**ராஜாஜி :** குடிமக்கள் என்று சொல்லும்போது பிறகு தனியாக மனிதர்கள் என்று சொல்வதில்லையே. அகன்ற ஒரு சொல்லைப் பயன் படுத்தும்போது அது உள்ளடக்கும் இன்னொரு சொல் அங்கே தேவை யில்லைதானே.

**கே.எம். பணிக்கர் :** சிறுபான்மையினரையும் உள்ளடக்கிய வகுப்புகள் எனப் போட்டுவிடலாமா?

**படேல் :** வகுப்புகள் என்பது சிறுபான்மையினரையும் உள்ளடக்கி விடுகிறது. எனவே அதுவே போதுமானது.

**பிராங்க் அந்தோணி :** நான் திருத்தம் ஒன்றை முன்மொழிகிறேன். வகுப்புகள் மற்றும் சிறுபான்மையினர் என்று இப்பிரிவு திருத்தப்பட வேண்டும்.

**உஜ்ஜெய்ல் சிங் :** சிறுபான்மையினரும் பிற்பட்ட வகுப்புகளும்.

**படேல் :** இது ஒரு எளிய மொழிப் பிரச்சனை. வகுப்புகள் என்பது சிறுபான்மையினரையும் உள்ளடக்குகிறது. திருத்தத்திற்கு எந்தத் தேவையும் இல்லை. பட்டப்பகல் போல் தெளிவான ஒரு விசயத்தில் என்ன சந்தேகம்? இந்தப் பிரிவை உருவாக்குவதே சிறுபான்மை யினருக்குத்தான். அரசு சிறுபான்மையினரை விலக்கி விடும் என்றா சொல்கிறீர்கள்?

**பிராங்க் அந்தோணி :** இப்போதுள்ள தலைவர்களை நாங்கள் சந்தேகிக்கவில்லை. எதிர்காலத் தலைவர்கள் எப்படி இருப்பார்கள் எனச் சொல்ல முடியாதே?

**படேல் :** வகுப்புகள் என்றால் அது சிறுபான்மையினரையும் உள்ளடக்காது எனச் சொல்லும் அளவிற்கு எந்தத் தலைவனும் முட்டாளாக இருக்கமாட்டான்.

**பிராங்க் அந்தோணி :** ஆனாலும் நாம் 'சிறுபான்மையினர்' என்ற சொல்லைப் பிற இடங்களில் பயன்படுத்தியுள்ளோமே.

**படேல் :** வகுப்புகள் என்றால் அகன்ற பொருளுடைய சொல் என்பதை யாரும் ஏற்றுக் கொள்வர். அகன்ற பொருளுடைய சொல்லைப் பயன்படுத்துவதே நல்லது.

ராஜாஜியும், கே.எம். முன்ஷியும் வகுப்புகள் என்று சொன்னாலே போதும் என்று 'விளக்கிய' பின், சிறுபான்மையினர் சார்பாகக் கொண்டு வரப்பட்ட திருத்தம் முறியடிக்கப்பட்டது. வகுப்புகள் என்று சொன்னால் அது சிறுபான்மையினரையும் உள்ளடக்கும் என்று சொன்னாலும் கூடச் 'சிறுபான்மையினர்' என்கிற சொல்லைத் தவிர்ப்பதில் பார்ப்பனர்களும் படேலும் குறிப்பாய் இருந்ததை நாம் கவனிக்கத் தவறலாகாது.

அரசியல் சட்ட அடிப்படையில் விளக்கங்கள் அளிக்கும்போது என்ன உட்பொருளுடன் அந்தப் பிரிவு இயற்றப்பட்டது அப்போது



நடைபெற்ற விவாதங்கள் எத்தன்மையானவை என்பது முக்கியம். பல சந்தர்ப்பங்களில் நமது நீதிமன்றங்கள் கூட இவற்றைக் கணக்கில் கொள்வதில்லை. அரசியல்வாதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. அதிலும் இரட்டை நாக்குப் படைத்த மகா தந்திரசாலியான வாஜ்பேயி போன்ற பார்ப்பனர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பாருங்கள் வகுப்புகள் என்றால் இது சிறுபான்மையினரையும் உள்ளடக்காது என எந்த முட்டாள் தலைவரும் எதிர்காலத்தில் சொல்ல மாட்டான் என்றார் படேல். ஆனால், மாநில அரசுகள் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பது சட்ட விரோதமானது, அரசியல் சட்டத்திற்கு எதிரானது என நா கூசாமல் பேச முடிகிறது வாஜ்பேயியால்.

எனினும் தொடர்ந்து 16 (4) ஆவது பிரிவை முஸ்லிம்களுக்குப் பொருந்தாது என இந்துத்துவவாதிகள் சொல்லி வந்ததன் விளைவாக, பா.ஜ.க. அரசு நீதிபதி வெங்கடாச்சலையா தலைமையில் அரசியல் சட்டம் குறித்த பரிசீலனைக் குழு ஒன்றை (NCRWC) உருவாக்கியபோது அதன் முன் முஸ்லிம்கள் ஒரு விண்ணப்பத்தை முன்வைத்தனர். 16(4)பிரிவில் சிறுபான்மையினர் என்ற சொல்லையும் சேர்க்கத் திருத்தம் கொண்டு வருமாறு பரிந்துரை செய்ய வேண்டும் என்பதே அவர்களின் வேண்டு கோள். அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது வெங்கடாச்சலையா குழு. எனினும் புதிய திருத்தம் தேவை இல்லை. தற்போதுள்ள வடிவிலேயே அது முஸ்லிம்களையும் உள்ளடக்கத்தான் செய்கிறது என அறிக்கையில் பதிந்தார் வெங்கடாச்சலையா.

எனவே மத அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்பதே நமது அரசியல் சட்டத்தின் அடிப்படையான கருத்து என்கிற இந்துத்துவவாதி களின் பிரச்சாரம் முற்றிலும் விஷமத்தனமானது. ஆனால் அதற்குரிய ஒரு சாத்தியத்தை அரசியல் சட்ட அவை ஏற்படுத்திவிட்டுப் போயுள்ள தையும் நாம் கவனிக்கத் தவறலாகாது.

மின்டோ-மார்லி சீர்திருத்தங்களை ஒட்டி 1909 முதல் இங்கே தனி வாக்காளர் தொகுதியும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடும் முஸ்லிம் களுக்கு வழங்கப்பட்டு வந்ததெனினும், இன்று அவர்களுக்கு அரசியல் இட ஒதுக்கீடும் சரி, அரசுப் பணி இட ஒதுக்கீடும் மறுக்கப் பட்டுள்ளது. இதன் விளைவாக பாராளுமன்றம், சட்டமன்றம், அரசுப் பணிகள் ஆகியவற்றில் அவர்களின் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. 1998ஆம் ஆண்டு தேசிய சர்வேயின் படி (NSS) மொத்த மக்கள் தொகையில் 12 சதமாக உள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை அய்.ஏ.எஸ். பதவிகளில் 2.86 சதம்தான். அய்.பி.எஸ். களில் வெறும் 2 சதம்தான். தொழிற்சாலைகளில் 7.4 சதம், வணிகத்தில் 4 சதம். இந்திய அரசியல் சட்ட அவை அதுகாரும் அரசியலிலும், வேலை வாய்ப்பிலும் இருந்து வந்த இட ஒதுக்கீட்டை முஸ்லிம் களுக்கு ரத்து செய்ததன் விளைவுதான் இது.

அரசியல் சட்ட அவையில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து இட ஒதுக்கீடு தொடர்பாக நான்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவை :

1. அரசியல் இட ஒதுக்கீடு பாராளுமன்ற, சட்டமன்றங்களில் தனி வாக்காளர் தொகுதி.

2. அமைச்சரவையில் இட ஒதுக்கீடு.

3. அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு.

4. சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் சரியாகச் செயல்படுகின்றனவா எனக் கண்காணிக்க உரிய அதிகாரிகளை நியமித்தல்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தபோது, சர்தார் பட்டேலும், கோவிந்த வல்லப் பந்த் போன்றவர்களும் ஆற்றிய எதிர்வினைகள் கொடூர மானவை. முஸ்லிம்கள் மத்தியிலோ இந்தக் கோரிக்கைகள் ஒருமித்த குரலில் முன் வைக்கப்படவில்லை. இந்த ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி இந்தக் கோரிக்கைகளையும் மற்றும் உருது மொழி, 'ஷரியத்' தொடர்பான கோரிக்கைகளையும் அரசியல் சட்ட அவையில் நிரம்பியிருந்த இந்து தேசியக் கருத்தியலாளர்கள் முறியடித்த கதை சோகமானது, அநீதியானது.

**2**

# விவாதம் என்ற பெயரில் உமிழப்பட்ட அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள்

இந்திய-பாகிஸ்தான் பிரிவினை என்கிற பின்னணியில் இந்திய அரசியல் சட்ட அவை உருவாக்கப்பட்டது என்பதை நாம் மறந்து விடலாகாது.

காந்தி-நேரு போன்ற சனநாயக உணர்வுமிக்க தலைவர்களைத் தவிர, பிற இந்து தேசியத் தலைவர்கள் அனைவராலும் 'நாட்டைத் துண்டாடிய துரோகிகள்' என இந்திய முஸ்லிம்கள் குற்றம் சாட்டப் பட்டுக் கொண்டிருந்த தருணம் அது.

பெரும்பாலான முஸ்லிம் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக பாகிஸ்தானைத் தேர்வு செய்து புறப்பட்டுச் சென்றனர். சவுத்ரி கலிகுஸ்மான், இஸட்.எச். லாரி, ஹுசைன் இமாம், அப்துல் சத்தார் சையத், சுஹ்ரவர்தி முதலியோர் இதில் அடக்கம். இவர்களில் பலர் அரசியல் சட்ட அவை உறுப்பினர்கள். காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயணன் உட்படப் பலரும் முஸ்லிம்களைத் தமது அரசியல் கட்சிகளைக் கலைத்து விட்டு காங்கிரஸ், சோசலிஸ்ட் போன்ற கட்சிகளில் சேருமாறு ''அறிவுரை'' வழங்கினர்.

இந்திய முஸ்லிம்களுக்குத் தலைமை அளிக்க இங்கு யாரும் இல்லை. தகுதிபெற்ற அபுல் கலாம் ஆசாத் அதற்குத் தயாராக இல்லை. அவரும் கூட முஸ்லிம் லீக்கைக் கலைத்துவிடும்படி அறைகூவல் விடுத்தார்.

இன்னொரு பக்கம் வரலாறு காணாத மதக் கலவரங்கள். இரு புறமும் படுகொலைகள். இதற்கிடையில் முஸ்லிம்களின் மிகப்பெரிய தார்மீக ஆதரவு சக்தியாகிய மகாத்மா காந்தியை இந்து வெறியர்கள் சுட்டுச் சாய்த்தனர். காங்கிரஸுக்குள் நேருவைச் சுற்றியிருந்த ராஜேந்திர பிரசாத், படேல், பந்த், சியாமா பிரசாத் முகர்ஜி எனப் பலரும் முஸ்லிம் எதிர்ப்பாளர்களாக இருந்தனர். நேரு மட்டும் விதிவிலக்கு. ஆனால் அவருக்கு முஸ்லிம்கள் பிரச்சினையில் கட்சிக்குள் ஆதரவு கிடையாது. இந்திய முஸ்லிம்கள் அனைவரும் பாகிஸ்தானுக்கே விசுவாசிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், தமது தேச பக்தியை எப்படியாவது நிரூபித்துக் காட்ட வேண்டிய பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டது.

ஒன்றுபட்ட முஸ்லிம் லீக்கின் கராச்சி மாநாட்டுத் (டிசம்பர் 14, 15, 1947) தீர்மானத்தின் படி 1948 மார்ச் 10 அன்று சென்னையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கூடியது. 30 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேற்கு வங்கம், ஒரிசா, பீஹார், டெல்லி போன்ற மாநிலங்களிலிருந்து யாரும் கலந்து கொள்ளவில்லை. உத்தரபிரதேசத்திலிருந்து மவுலானா ஹஸ்ரத் மொகானி மட்டும் கலந்து கொண்டார். 'அரசியல் சாராத நடவடிக்கைகளுக்கு அழுத்தம் கொடுத்து' 'லீக்'கைத் தொடர்வதாக முடிவு செய்யப்பட்டது. அரசியல் கோரிக்கைகளை வைப்பதே தேசத் துரோகம் என்பதான ஒரு சூழல் முஸ்லிம்களுக்கு உருவாக்கப் பட்டிருந்ததை நாம் கவனிக்க வேண்டும். ''தேசத்தையே பிரித்துக் கொடுத்தாகிவிட்டது. இன்னும் என்ன உங்களுக்குக் கோரிக்கை?'' என்பதுதான் இந்து தேசியவாதிகளின் (படேல் முதலானோர்) கருத்தாக இருந்தது. இதற்குச் சரியாகப் பத்துநாட்கள் முன்னர் (பிப்ரவரி 29, 1948) அரசியல் சட்ட அவையில் இருந்த முஸ்லிம் லீக் கட்சி கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவராக காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களும், பொதுச் செயலாளராக மஹபூப் அலி பெய்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருவரும் சென்னையைச் சேர்ந்தவர்கள். பொருளாளராகத் தேர்வு செய்யப்பட்ட ஹாஜி ஹுசைனலி பி. இப்ராஹீம் சாஹிப் மட்டுமே வடமாநிலத்தைச் (மும்பை) சேர்ந்தவர். ஆக முஸ்லிம் லீக் என்பது தமிழ்நாடு, கேரள மாநிலங் களையே பெரும்பாலும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒரு கட்சியாக அமைந்தது. 1949 ஏப்ரல் 18 முதல் ஜாமியாத்துல் உலமாயே ஹிந்த் அமைப்புத் தன்னை அரசியல் சாராத இயக்கம் என அறிவித்துக் கொண்டது.

இந்தப் பின்னணியில் நடைபெற்ற அரசியல் சட்ட அவை விவாதத்தை இனி தொடர்வோம்.

1909 முதல் தாம் அனுபவித்து வந்த தனி வாக்காளர் தொகுதி, அரசுப் பணிகள் மற்றும் அமைச்சரவையில் இடஒதுக்கீடு, இவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு அதிகாரி ஆகிய கோரிக்கைகள் அரசியல் சட்ட அவையில் முஸ்லிம்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டன. முஸ்லிம் லீக் தலைவர்கள் இதில் முன்னணியில் இருந்தனர். இந்தக் கோரிக்கைகள் குறித்து ஆராய்வதற்கென அரசியல் சட்ட அவையில் ஒரு துணைக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையை ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று அதன் தலைவர் வல்லபாய் பட்டேல் அவையில் சமர்ப்பித்தார். தனி வாக்காளர் தொகுதி என்கிற கோரிக்கை மறுக்கப்பட்டது. ஆனால், இப்போது SC/ST அட்டவணைச் சாதி யினருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது போல் கூட்டு வாக்காளர்கள் தொகுதியில் முஸ்லிம்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்குவதைக் குழு பரிந்துரைத்திருந்தது.



இதுதொடர்பான விவாதம் அரசியல் சட்ட அவையில் ஆகஸ்ட் 27, 28 (1947) ஆகிய நாட்களில் நடைபெற்றது. **பி. பாக்கர் சாஹேப் பகதூர்** அவர்கள் முஸ்லிம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்கிற திருத்தத்தை முன்மொழிந்தார். எனினும் அவர், ''எங்களில் ஒரு வலிமையான பகுதியினர் இக்கருத்துக்களிலிருந்து வேறுபடுகின்றனர். தனி வாக்காளர் தொகுதியை அவர்கள் ஆதரிக்கவில்லை என நான் அறிவேன் அய்யா'' என்றும் சொல்ல நேர்ந்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து நடைபெற்ற விவாதம்:

**சவுத்ரி கலிக்குஸ்மான் (உ.பி.) :** ''......இந்தச் (சாதாரண) கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் இங்குள்ள மாபெரும் பெரும் பான்மைக்கு என்ன நேர்ந்துவிடும்? மேல்முறையீடு செய்வதற்கு இப்போது எங்களுக்கு மூன்றாவது நபர் (வெள்ளை அரசு போல் - அ.மா.) யாரும் கிடையாது. சர்தார் படேலிடம்தான் நாங்கள் முறையிட வேண்டும். சிறுபான்மையினரின் விதியைத் தீர்மானிக்கும் இறுதித் தீர்ப்பாளராக இன்று அவர் தாம் உருப்பெற்றுள்ளார். தனி வாக்காளர் தொகுதியை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களானால் தமது உண்மையான பிரதிநிதி களைத் தேர்வு செய்து அனுப்ப உதவும் என முஸ்லிம் சமுதாயம் நம்புகிறது. இந்தப் பிரதிநிதிகள் எமது குறைகளையும், கோரிக்கை களையும் உங்கள் முன் - வேறு எந்த அதிகாரத்தின் முன்னுமல்ல, வேறு எந்த அரசாங்கத்தின் முன்னுமல்ல, பாகிஸ்தான் முன்னும் அல்ல - உங்கள் முன் (பணிந்து) வைப்பர். எனவே, உங்களிடம் நான் பணிந்து கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சபையின் முன் இரந்து (beg) கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைக்க நேர்ந்துள்ள புதிய சூழலைத் (தயவு செய்து) கணக்கிலெடுத்துக் கொள்ளுங்கள்''.

**கோவிந்த வல்லப பந்த் :** இன்று உருவாகியுள்ள புதிய நிலையில் எந்த ஒரு குடிமக்களுக்கும் தனது கருத்தை வலியுறுத்தும் வாய்ப்பிருக் கிறது. இந்நிலையில் தனி வாக்காளர் தொகுதி என்பது சிறுபான்மை யினர் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும். அவர்களுக்கு அது மிகப்பெரிய தீங்கிழைக்கும் என நான் கருதுகிறேன். சிறுபான்மையினர் எப்போதும் சிறுபான்மையினராகவே தான் இருக்க விரும்புகின்றனரா? ஒரு மாபெரும் தேசத்தின் பிரிக்க இயலாத ஒரங்கமாக நீங்கள் ஆக வேண்டாமா? பிற சமூகத்திலிருந்து தனித்து ஒதுங்குதல் என்பது மிகப் பெரிய ஆபத்தாக முடியும். உங்கள் குரல் மற்றவர்களிடமிருந்து தனித்து ஒலிக்காமல் சுருதி மாறுபடாமல் ஒலிக்கவேண்டிய ஒரு நிலையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். சிறுபான்மையினர் என்னதான் விரும்புகிறார்கள்? இந்த நாட்டு நிர்வாகத்திலும், அரசிலும் அவர்களுக்கு ஒரு பங்கு வேண்டும் எனக் கருதுகிறார்களா இல்லையா? உங்களுக்கு ஒன்று சொல் கிறேன். பிற சமூகத்திலிருந்து உங்களை நீங்கள் பிரித்துக் கொண்டீர் களானால், நீங்கள் அமைச்சரவையில் இடம் பெற முடியாது.

ஏனெனில் அமைச்சரவை என்பது கூட்டுத் தொகுதிக்கே பொறுப்பானதாகும்.

**காஸி சையத் கரிமுத்தீன் (மத்திய மாகாணம்) :** எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடும் ஒரு மந்திரக்கோலாக கூட்டு வாக்காளர் தொகுதியை நாம் கருதமுடியாது. இன்றைய சூழலில் பல்வேறு அம்சங் களையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். (முஸ்லிம் களுக்குத்) தொகுதி ஒதுக்கீட்டை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளது ஒரு மிகப்பெரிய கருணை நடவடிக்கை (generous gesture). ஒரு குறிப்பிட்ட காலத்திற்கேனும் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் குறைந்தபட்ச வாக்குகளையேனும் நீங்கள் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம்களின் அரசியல் விருப்பை அதுதான் நிறைவேற்றும்.

**மாண்புமிகு சர்தார் வல்லபாய் படேல் :** மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி ஒதுக்கீட்டை நான் ஏற்றுக் கொண்டபோது நமது முஸ்லிம் லீக் நண்பர்கள் எங்களது கருத்தின் நியாயத்தை உணர்ந்து கொள்வார்கள் என்றும் தேசப் பிரிவினைக்குப் பிந்தைய மாறியுள்ள சூழலில் தம்மைப் பொருத்திக் கொள்வார்கள் என்றும் எண்ணினேன். ஆனால், இரட்டை வாக்குரிமை இந்த நாட்டில் முதன்முதலில் அறிமுகப் படுத்தப்பட்டபோது, என்ன முறையைக் கையாண்டார்களோ, அதைத் தான் இப்போதும் செய்கிறார்கள். (அவர்களின்) மொழி எத்தனை இனிமையாக இருந்தபோதிலும் அவர்கள் மேற்கொள்ளும் நடைமுறையில் முழு அளவு விஷம் நிரம்பியுள்ளது. முஸ்லிம் சமுதாயத்தை இன்றைய சூழலில், இன்றைய நிலையில் பாதுகாப்பதற்கு எத்தனை விலை கொடுக்க வேண்டியிருந்தது என்பதை நான் அறிவேன்.

எனவே உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். நீங்கள் முன்பு மேற்கொண்ட மாதிரியான போராட்ட நடவடிக்கைகளுக்கான காலமெல்லாம் முடிந்து போய்விட்டது.

ஒரு புதிய அத்தியாயத்தை நாம் தொடங்கியுள்ளோம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. உங்களை நான் மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன். பழசை மறந்துவிடுங்கள். நடந்ததை மறவுங்கள். நீங்கள் விரும்பியதைப் பெற்றுவிட்டீர்கள். உங்களுக்கு ஒரு தனி நாடு கிடைத்து விட்டது. நினைவிற்கொள்ளுங்கள், (நாட்டுப் பிரிவினைக்கான) பொறுப்பு உங்களுடையதுதான். பாகிஸ்தானில் உள்ளவர்கள் அதற்குப் பொறுப்பு அல்ல. நீங்கள்தான் போராட்டத்தை முன்னெடுத்தீர்கள். நீங்கள் அதைப் பெற்றுவிட்டீர்கள். இப்போது நீங்கள் விரும்புவது என்ன? எனக்குப் புரியவில்லை.

இந்துப் பெரும்பான்மையுள்ள மாகாணத்தில் சிறுபான்மையினராகிய நீங்கள் போராட்டத்தை முன்னெடுத்தீர்கள். தேசத்தைப் பிரித்தீர்கள். இஸ்லாமிய சகோதரனின் பாசத்தைப் பெறவேண்டு



மானால் ஏற்கனவே பிரித்ததை மீண்டும் பிரிக்குமாறு இப்போது சொல்கிறீர்கள்.

விவாதத்தில் வெளிப்படும் இரு சாராரின் தொனியையும் வாசிப்பவர்கள் அறியக்கூடும். விளக்கம் தேவையில்லை. விவாத இறுதியில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் சுருங்கத் தருகிறேன்:

1. மத்திய-மாநில அவைகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் கூட்டு வாக்காளர் தொகுதியின் அடிப்படையிலேயே நடைபெறும். (அதாவது தனி வாக்காளர் தொகுதி கோரிக்கை மறுக்கப்படுகிறது-அ.மா.)

2. மத்திய-மாநில மற்றும் கீழ் அவைகளில் முஸ்லிம்களுக்கு அவர்களின் சனத்தொகை அடிப்படையில் தொகுதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.

3. சிறுபான்மைச் சமூகத்தவர்கள் ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் மட்டுமின்றிப் பொதுத் தொகுதியிலும் போட்டியிடலாம்.

4. அமைச்சரவையில் சிறுபான்மையினருக்குச் சட்டப்பூர்வமாக இடஒதுக்கீடு அளிக்க இயலாது.

5. எல்லாச் சிறுபான்மையினருக்கும் உரிய பங்கீடு அளிக்கப் படுகிறது. மத்திய-மாநில அரசுப் பணிகளின் நியமனங்களின்போது, எல்லாச் சிறுபான்மையினரின் கோரிக்கைகளும் கணக்கில் கொள்ளப் படும் (நிர்வாகத்தை பாதிக்காத அளவுக்கு) (குறிப்பு: அரசியல் சட்டம் அல்லது அதற்கான அட்டவணையில் உரிய பிரிவுகள் சேர்க்கப்படும்).

6. சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்புகள் சரியாக நிறைவேற்றப்படுகிறதா எனக் கண்காணித்து அரசுகளுக்குத் தெரிவிக்க ஏதாவது ஒரு அதிகாரியை மத்தியில் குடியரசுத் தலைவரும் மாநிலங்களில் ஆளுநர்களும் நியமிப்பர்.

7. மத்தியிலும் மாநிலங்களிலும் சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

இவை உரிய விவாதங்களுக்குப் பின் ஆகஸ்டு 28 அன்று அரசியல் சட்ட அவையில் எடுக்கப்பட்ட முடிவுகள். தனி வாக்காளர் தொகுதி முறை மறுக்கப்பட்ட போதிலும் முஸ்லிம்களின் சனத்தொகைக்கு ஏற்ப தொகுதி ஒதுக்கீடுகள், அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு செய்வதற்கு அரசியல் சட்டத்தில் வழிவகுத்தல் என்பன அன்று ஏற்றுக் கொள்ளப் பட்டன. ஆனால் அரசியல் சட்டம் முழு வடிவெடுக்கும்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கோரிக்கைகளையும் கூட வல்லபாய் படேலும், மற்றவர்களும் முறியடித்த கதை மேலும் சோகமானது.

## 3

# தீர்ப்பை மாற்றி எழுதிய சர்தார் படேலின் பஞ்சாயத்து

மேற்குறிப்பிட்ட முடிவுகளை அரசியல் சட்ட அவை எடுத்த போது (27, ஆகஸ்டு 1947) சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகள் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராக இருந்தவர் சர்தார் படேல். இந்த முடிவுகளின் அடிப்படையில் அரசியல் சட்ட நகல் வரைவுக் குழு சிறுபான்மையினருக்கான உரிமைகளை வரையறுக்கும் 299ஆவது பிரிவை உருவாக்கியது. எனினும் அரசியல் சட்டம் இறுதி வடிவம் எடுக்கும் நிலையில் சிறுபான்மையினருக்கு சட்ட மற்றும் பாராளுமன்றங்களிலும் அரசுப் பணிகளிலும் இடஒதுக்கீடு செய்வது குறித்து அவை மீண்டும் 1949 மே 25, 26 தேதிகளில் விவாதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

விவாதித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை மீண்டும் விவாதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதன் பின்னணியாக சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகள் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராக இருந்த சர்தார் படேல் 1949 மே 11ந்தேதி அன்று அவை முன் வைத்த அறிக்கை ஒன்று அமைந்தது. முன்பு நிறைவேற்றப்பட்ட முடிவுகளில் ஒன்றை அது மறுபரிசீலனை செய்யக் கோரியது. மறுக்கப்பட்ட தனி வாக்காளர் தொகுதிகளையோ, மறுக்கப்பட்ட அமைச்சரவை இட ஒதுக்கீட்டையோ அது மறு பரிசீலனை செய்யக் கோரவில்லை. மாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உரிமையை அது மறுபரிசீலனை செய்யக் கோரியது. சட்ட, பாராளுமன்றங்களில் மக்கள் தொகை வீதத்திற்கு ஏற்றாற்போல சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு வழங்குவது என்கிற முடிவைத்தான் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றார் சர்தார் படேல். இவ்வுரிமை நீக்கப்படவேண்டும் எனச் சிறுபான்மையினரே விரும்புவதாகவும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

படேலின் மறுபரிசீலனைக் கடிதம் தொடர்பாக மே 26, 27 தேதிகளில் அரசியல் சட்ட அவையில் நடைபெற்ற விவாதத்திலிருந்து சில பகுதிகள்:

**முஹம்மது இஸ்மாயில்** *(முஸ்லிம் லீக், சென்னை) (காயிதே மில்லத் அவர்கள் - அ.மா)* : சட்ட ரீதியான ஒதுக்கீட்டை ஒழிக்க வேண்டுமென சிறுபான்மையினரே கருதுகின்றனர் எனத் தாம் திருப்தி யுறுவதாக ஆலோசனைக் குழு அறிக்கை குறிப்பிடுகிறது. இந்த முடிவுக்கு



ஆலோசனைக்குழு எப்படி வந்ததென எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு இவ்வவையின் முஸ்லிம் உறுப்பினர்களில் சிலர் இட ஒதுக்கீட்டை ஒழிப்பதை ஏற்றுக்கொண்டிருக்கலாம். நான் அதை மறுக்கவில்லை. இதன்மூலம் அவர்களில் சிலர் இந்த அவைக்கு எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த உரிமத்தை மறுதலித்து உதறித் தள்ளியுள்ளனர். அவர்கள் தமது பிரதிநிதித்துவப் பண்பையே அழித்துக் கொண்டுவிட்டனர். எனவே அவர்களை முஸ்லிம் சமுதாயத்தின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வது நியாயமன்று. அய்யா, நான் உறுதியாய்ச் சொல்கிறேன். ஒரு சமுதாயம் என்கிற வகையில் முஸ்லிம்கள் இட ஒதுக்கீட்டைக் கைவிடவில்லை. அது மட்டுமன்று. தனி வாக்காளர் தொகுதி தக்க வைக்கப்பட வேண்டும் என இவ்வவையை அவர்கள் வற்புறுத்துகின்றனர். அதுவே சட்ட அவைகளில் சரியான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும். இன்றும் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக உள்ள முஸ்லிம் லீக் இதனைப் பலமுறை வற்புறுத்தியுள்ளது.

**இஸட். எச். லாரி** *(முஸ்லிம் லீக், உத்தரப்பிரதேசம்)* : எனது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அவர் முஸ்லிமோ அல்லது இந்துவோ அவர் இந்த நாட்டின் ஆளுகையில் ஒரு வலுவான குரலை ஒலிப்பவராக இருக்க வேண்டும் என்பது என் பெருவிருப்பம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது இரட்டை வாக்காளர் தொகுதி என்பதை நான் உறுதியாக எதிர்க்கிறேன். சட்ட-பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் தொகுதி ஒதுக்கீடு என்கிற முடிவிற்கும் நான் ஆதரவாக இல்லை. முன்னது மிகவும் ஆபத்தானது. பின்னது பயனற்றது. பிரிவினைக் கறையைத் தன்னகத்தே கொண்டது.

**நஸீருத்தீன் அகமது :** அய்யா, உறுப்பினர் எண்ணிக்கையில் முஸ்லிம்களுக்கென தொகுதி ஒதுக்கீடு செய்வது - அதுவும் குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் - முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய தீங்கு பயக்கும் என நான் நம்புகிறேன். உண்மையில் இத்தகைய தொகுதி ஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்டு நாங்கள் தேர்தல் களத்திற்குச் சென்றோமானால் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தற்போதுள்ள உறவு சீர்கெடும். தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் ஒரு (முஸ்லிம்) வேட்பாளரை இந்துக்கள் நிறுத்துவார்கள். எதிராக இன்னொரு (முஸ்லிம்) வேட்பாளரை முஸ்லிம்கள் நிறுத்துவார்கள். இது முஸ்லிம்களுக்கிடையே பிளவுகளை உருவாக்கும். தொகுதி ஒதுக்கீடு இல்லாமல் பொதுத் தொகுதிகளில் போட்டியிடுவது என்பது இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நல்லுறவை வளர்க்கும். போட்டியிடும் யாரும் முஸ்லிம் வாக்குகளைப் புறக்கணித்துவிடமாட்டார்கள். எனவே முஸ்லிம்களின் பாதுகாப்பு என்பது புத்திசாலித்தனமாக அவர்கள் தம் பங்கை எவ்வாறு ஆற்றுகிறார்கள். பொது விசயங்களில் இந்துக்களுடன் எந்த அளவுக்குக் கலந்து செயல்படுகின்றார்கள் என்பவற்றைப் பொறுத்ததேயாகும்.

**பேகம் அய்ஜாஸ் ரஸுல்** (உ.பி.) : மதச்சார்பற்ற ஒரு நாட்டில் தனி வாக்காளர் தொகுதிக்கு இடமில்லை என்பதை நான் தொடக்கம் முதலே உணர்ந்து வருகிறேன். கூட்டு வாக்காளர் தொகுதியை ஏற்றுக்கொண்டு பின் சிறுபான்மையினருக்கெனத் தொகுதி ஒதுக்கீடு செய்வதென்பது அர்த்தமற்றதும் பயனற்றதுமாகும்.

**சையத் முஹம்மது சாதுல்லாஹ்** (அஸ்ஸாம்) : தலைவர் அவர்களே! அய்யா! இந்த அவையின் முஸ்லிம் உறுப்பினர்கள் சென்ற டிசம்பரில் அதிகாரப்பூர்வமாக அன்றி சாதாரணமாய்ச் சந்தித்து இதுகுறித்து உரையாடினோம். எந்த முடிவையும் அந்தச் சமயத்தில் எங்களால் எட்ட முடியவில்லை. உறுப்பினர்கள் தத்தமது வாக்காளர் தொகுதிகளை இது தொடர்பாகக் கலந்தாலோசித்து வந்த பின் முடிவெடுக்கலாம் என நான் சொன்ன கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி அஸ்ஸாம் சட்டமன்றத்திலுள்ள எனது கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர்கள் எல்லோருக்கும் நான் கடிதம் எழுதினேன். அவர்கள் அனைவரும் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்கிற கருத்திற்கு ஒருமித்த குரலில் ஆதரவளித்துள்ளார்கள்.

**பி. பாக்கர் சாஹிப் :** இந்த அவையின் எல்லா முஸ்லிம் உறுப்பினர்களும் டிசம்பரில் சந்தித்துப் பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். அது உண்மையல்ல.

**சையத் முஹம்மத் சாதுல்லாஹ் :** நான் இதற்கு ஒன்றும் செய்ய இயலாது. அத்தருணத்தில் பாக்கர் சாஹிப் அவர்கள் டெல்லியில் இல்லாது போயிருக்கலாம். (முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கும்) மிக முக்கியமான இவ்விஷயத்தில் இவ்வவையில் உள்ள மிகச் சில முஸ்லிம் உறுப்பினர்கள் கூட கருத்தொருமிப்பிற்கு வர இயலாத ஒரு வேதனைக் குரிய காட்சியை இன்று நான் காண்கிறேன். அவையில் மாறுபட்ட கருத்துக்களை இவர்கள் முன்வைப்பது வருத்தத்தை அளிக்கிறது. பழைய முடிவை மாற்றி மே 11ஆம் தேதி அன்று சிறுபான்மையினர் ஆலோசனைக் குழு திடீரென எடுத்த முடிவு போதுமான தரவுகளின் அடிப்படையிலானதல்ல என நான் அஞ்சுகிறேன். இந்த ஆலோசனைக் குழுவில் நானும் ஒரு உறுப்பினர் என்கிற வகையில் ஒன்றைச் சொல்ல முடியும். சிறுபான்மையினருக்குத் தொகுதி ஒதுக்கீடு அளிப்பதென்கிற முடிவு அவையில் விவாதித்த பின்பு எடுக்கப்பட்டது என்பதால் தொகுதி ஒதுக்கீடு வேண்டாம் என அம்முடிவை மாற்ற வேண்டுமானால் அதை இந்த ஆலோசனைக் குழுவிலுள்ள சிறுபான்மை உறுப்பினர்கள் மட்டுமே அய்யத்திற்கிடமின்றி முடிவு செய்யவேண்டும் என்கிற சரியான நிலைப்பாட்டை அதன் தலைவர் (சர்தார் படேல் அ.மா.) மேற்கொண்டிருந்தார். மே, 11 கூட்டத்தில் சொந்தப் பிரச்சனை ஒன்றால் என்னால் கலந்துகொள்ள இயலவில்லை. இவ்வாறு முடிவை மாற்றும் போது நான்கு முஸ்லிம் உறுப்பினர்கள் மட்டுமே அங்கிருந்தனர். தொகுதி ஒதுக்கீடு வேண்டாம் என்கிற கருத்தை டாக்டர் எச்.சி. முகர்ஜி



முன்மொழிந்தபோது ஒரு முஸ்லிம் உறுப்பினர் அதை ஆதரித்தார். இன்னொரு முஸ்லிம் உறுப்பினர் அதை எதிர்த்தார். ஒன்றுக்கொன்று சரியாகிவிட்டது. அமைச்சராகிய மாண்புமிகு மவுலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் நடுநிலையில் இருப்பதென்கிற சரியான நிலைப்பாட்டை மேற்கொண்டார். ஒரு மவுலானா இத்தகைய நிலைப்பாட்டை மேற்கொண்டவுடன் இன்னொரு மவுலானா ஆகிய மவுலானா ஹிஸ்புல் ரஹ்மானும் நடுநிலை வகிப்பதென்ற நிலைப்பாட்டை மேற்கொண்டார். அய்யா, மரியாதைக்குரிய சர்தாரின் முடிவுப்படி முஸ்லிம்களுக்கு ஒதுக்கீடு வேண்டுமா இல்லையா என முடிவெடுப்பதை முஸ்லிம் உறுப்பினர்கள் மட்டும் தீர்மானிப்பது என்பதுதானே தீர்க்கமான முடிவாக இருக்க முடியும். தனிப்பட்ட முறையில் எனக்கு ஒதுக்கீட்டில் ஆர்வமில்லை. அஸ்ஸாம் மாநிலத்தைப் பொருத்தமட்டில் அது தேவையுமில்லை. எனினும் இந்தியா முழுமையையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் போது முஸ்லிம் சிறுபான்மையினர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலாவது இட ஒதுக்கீடு கோருவது நியாயமானதுதான் என்பதை நாம் ஒத்துக்கொள்ளாமல் இருக்க இயலாது.

**முஹம்மது இஸ்மாயில்கான்** (உ.பி.) : ஆலோசனைக் குழுவின் மாற்றப்பட்ட முடிவுக்கு (தொகுதி ஒதுக்கீட்டை ரத்து செய்தல் அ.மா) எனது முழு ஆலோசனையும் தெரிவித்துக் கொள்கிறேன். வகுப்புவாதம் உருவாவதற்கே ஒதுக்கீடு வழிவகுக்கும். அது முஸ்லிம்களுக்கு பாதுகாப்பாக அமையாது. பேகம் அய்ஜாஸ் ரசூலின் ஒற்றை வாக்கின் அடிப்படையில் தொகுதி ஒதுக்கீடு தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டதாக எனது மரியாதைக்குரிய நண்பர் முஹம்மது சாதுல்லா அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். சுமார் பத்து அல்லது பன்னிரெண்டு மாதங்களுக்கு முன்னர் அரசியல் சட்ட அவையிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் சந்தித்துப் பேசியபோது ஒதுக்கீட்டை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதென முடிவெடுக்கப்பட்டது. சர். சையத் சாதுல்லா அதை ஏற்றுக் கொண்டார் என நான் சொல்லவில்லை. ஆனால், அங்கிருந்த பத்து அல்லது பன்னிரெண்டு உறுப்பினர்கள் அக்கருத்தை ஏற்றுக் கொண்டனர். எனது சென்னை நண்பர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசியல் சட்ட ரீதியில் உரிய பாதுகாப்புகள் அளிக்கப்பட்டால் இரட்டை வாக்குரிமையை விட்டுவிடுவது என்று இருபதாண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் கருதினர். 1935ஆம் ஆண்டு சட்டம் அந்தப் பாதுகாப்புகளை வழங்கவில்லை. இப்போது சட்டப் பூர்வமான பாதுகாப்புகள் உள்ளன. இனி ஏன் இரட்டைப் பிரதிநிதித்துவம்?

**தஜமுல் உசேன் :** எந்த ஒரு சமுதாயம் அல்லது மக்கள் குழுவிற்கும் ஏதோ ஒரு வகையில் ஒதுக்கீடு அளிப்பதென்பது கோட்பாட்டு அடிப்படையில் முழுத் தவறு என்பதே என் கருத்து. நான் ஒரு முஸ்லிம்.

முஸ்லிம்களுக்காக நான் இங்கு பேசுகிறேன். முஸ்லிம்களுக்குத் தொகுதி ஒதுக்கீடு இருக்கக்கூடாது. அஸ்ஸாம் மாகாணத்தின் முன்னாள் பிரதமர் சர். சாதுல்லா அவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. முஸ்லிம்களுக்குத் தொகுதி ஒதுக்கீடு கூடாது என்கிற முடிவுக்கு ஆலோசனைக் குழுவில் இருந்த பெரும்பான்மை முஸ்லிம் உறுப்பினர் களின் ஆதரவு இல்லை என அவர் குற்றம் சாட்டுகிறார். நான் இந்த அம்சத்தில் அவருடன் கருத்து வேறுபடுகிறேன். ஒதுக்கீட்டை ஒழிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பியதே நான் தான். மே 11 கூட்டத்தில் நானும் கலந்து கொள்ள இயலவில்லை. நான்கு முஸ்லிம் உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டனர். இரண்டு மவுலானாக்களும் எனது தீர்மானத்தை எதிர்க்கவில்லை. எல்லா உறுப்பினர்களும், எல்லா விசயங் களிலும் பேசுவதில்லை. எதிர்த்திருந்தால் அவர்கள் நான் எதிர்க்கிறேன் எனக் கூறியிருப்பார்கள். பேகம் அய்ஜாய் ரசூல் அதனை ஆதரித்தார். எனது மரியாதைக்குரிய இமாம் ஜாஃபர் மட்டுமே எதிர்த்தார். எனவே, தீர்மானத்திற்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தது. எனவேதான் மாண்புமிகு சர்தார் படேல் அவர்கள் தீர்மானத்திற்கு (மூன்றுக்கு ஒன்று என) முஸ்லிம்கள் ஆதரவு இருந்ததென அறிவிக்க வேண்டியதாயிற்று என்றே நான் புரிந்து கொள்கிறேன். ஆலோசனைக் குழுவில் மொத்தம் ஏழு முஸ்லிம் உறுப்பினர்கள். அதில் என்னையும் உசேன்பாய் லால்ஜியையும் சேர்த்து அய்வர் ஒதுக்கீடு வேண்டாம் என்கிற தீர்மானத்தை ஆதரித்தனர். இருவர் மட்டும் எதிர்த்தனர்.

**மவுலானா ஹஸ்ரத் மொகானி** (உ.பி.) : அய்யா, சர்தார் படேலின் தீர்மானத்திற்கு என் முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை நண்பர்கள் தீர்மானத்தை எதிர்க்கின்றனர். முஸ்லிம் லீக் இப்போது இல்லை. முஹம்மது இஸ்மாயில் அகில இந்திய முஸ்லிம் லீக் என்கிறார். எங்கே இருக்கிறது அது? நமக்குள் வகுப்பு அடிப்படையில் இனி கட்சிகள் இருக்க வேண்டாம் என இறுதியாக முடிவு செய்வோம்.

**மாண்புமிகு சர்தார் படேல் :** நாட்டில் இவ்வளவு நடந்ததற்குப் பின்னும் இத்தகைய திருத்தத்தை கோருவதிலிருந்து உங்கள் பார்வையில் ஏதும் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்றெனக்குத் தெரியவில்லை. முஸ்லிம் லீக்கிலிருந்து நீங்கள் ஆணை பெற்று வந்துள்ளீர்கள் என எனக்குத் தெரியும். இதற்காக நான் வருந்துகிறேன். ஆணைகளின் கீழ் செயல்படக்கூடிய இடமன்று இது. உங்கள் மனசாட்சியின்படியும் தேசத்திற்கு எது நல்லது என்பதன் அடிப்படையிலும் செயல்பட வேண்டிய இடம் இது. ஒரு சமுதாயம் தனது நலன்கள் தான் வாழும் நாட்டின் நலன்களிலிருந்து வேறுபடுவதாகக் கருதுவது பெரும் தவறு. தொகுதி ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொண்டால் முஸ்லிம் சமுதாயத்தின் மிகப்பெரிய எதிரியாக நான் என்னைக் கருதிக்



கொள்ள நேரிடும். ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக நாட்டில் இத்தகைய முடிவு ஏற்படுத்தும் விளைவுகளின் அடிப்படையில் நான் அப்படித்தான் கருதிக் கொள்ள முடியும். வகுப்பு அடிப்படையில் தனி வாக்காளர் தொகுதியை நீங்கள் பெறுகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். மத்தியிலோ, மாநிலங்களிலோ அமைச்சரவைகளில் உங்களால் இடம்பெற இயலுமா? நீங்கள் தனி நலன்களைக் கொண்டுள்ளீர்கள். கூட்டுப் பொறுப்புள்ள அரசாங்கத்தின் பெரும்பான்மையை (அதாவது) எங்களை நம்பாத நீங்கள் எப்படி அதில் இடம் பெற இயலும்? எனவே அரசில் உங்களுக்குப் பங்கிருக்க இயலாது. நீங்கள் உங்களை ஒதுக்கிக் கொண்டு என்றைக்கும் சிறுபான்மையினராகவே இருப்பீர்கள். இதனால் என்ன பயன் உங்களுக்கு?

இப்படித்தான் தொகுதி ஒதுக்கீடு முறியடிக்கப்பட்டது. முதலில் ஒத்துக்கொண்ட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பின்னர் மறுத்துவிட்டனர் என நான் ஒரே வரியில் இக்கட்டுரையை முடித்திருக்கலாம். இத்தனை விரிவாக இவற்றை நான் சொன்னது அன்றைய நிலையில் முஸ்லிம் உறுப்பினர்களின் மனநிலையின் தன்மை, அகில இந்திய அளவில் ஒரு அமைப்போ, கருத்தொருமிப்போ இல்லாமற்போன நிலை, அவற்றை படேல் போன்றவர்கள் முஸ்லிம்களுக்கான உரிமைகளை மறுப்ப தற்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது ஆகியவற்றைச் சுட்டிக் காட்டவே. மிகவும் சுருக்கியே இவற்றைத் தந்துள்ளேன். விவாதங்கள் குறித்து விரிவான ஆவணங்கள் உள்ளன. அவற்றை அல்லது என் இந்தச் சுருக்கப்பட்ட மொழியாக்கத்தையே கூட ஒரு பிரதியியல் ஆய்வு செய்தீர்களானால் ஒதுக்கீடு வேண்டாம் என்று சொன்னவர்கள் கூட எத்தகைய மனநிலையில், எத்தகைய அச்ச உணர்வில் அதைச் சொல்ல நேர்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள இயலும்.

தஜமுல் உசேன் தொடர்ந்து பேசும்போது குறிப்பிடுகிற இன்னொரு செய்தி இங்கே கருதத்தக்கது. அரசியல் சட்ட அவையிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் முதன்முதலில் டெல்லி வந்தபோது வெஸ்டர்ன் கோர்ட்டில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. எல்லோரும் வந்திருந்தனர். ஒதுக்கீடு கூடாது என்று தஜமுல் உசேன் பேசியபோது அதை ஒரு முஸ்லிம் உறுப்பினர் கூட ஆதரிக்கவில்லை. எல்லோரும் இட ஒதுக்கீடு வேண்டும் என்றே கூறினர். எனவே, அரசியல் சட்ட அவையில் அவர் தனது தீர்மானத்தை வற்புறுத்தவில்லை. இரண்டாவது கூட்டம் நவாப் முஹம்மது இஸ்மாயில் அவர்கள் இல்லத்தில் நடந்தது. முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட அத்தனை உறுப்பினர்களும் அதிலும் கலந்து கொண்டனர். பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஒதுக்கீடு தேவையில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது என்கிறார் தஜமுல் உசேன். சர் சாதுல்லாவும், 'சென்னைக் குழுவினரும்' மட்டுமே ஒதுக்கீட்டை ஆதரித்தனர் என்றும் அவர் கூறினார்.

அரசியல் சட்ட அவையில் முப்பத்து மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களில் பலர் பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்த பின் எஞ்சியது 23 பேர்கள் மட்டுமே. இவர்களில் நால்வர் இரட்டை வாக்கு உரிமையையும் (சென்னை குழுவினர்), நால்வர் தொகுதி ஒதுக்கீட்டையும், ஒருவர் அனைத்து வாக்குகளையும் கூட்டாக அளிக்கும் (Cumulative Voting) முறையை ஆதரித்தும் பதின்மூன்று பேர் ஒதுக்கீடு தேவையில்லை எனவும் வாக்களித்ததாக தஜமுல் உசேன் குறிப்பிட்டார்.

முதலில் ஒதுக்கீடு தேவை என ஒருமித்த குரலில் முழங்கியவர்கள் பின்னர் இப்படிப் பிளவுண்டு போக வேண்டியதற்குப் பின்னணியாக சர்தார் படேல் போன்றோரின் அச்சுறுத்தல்கள் விளங்கின என்பதை நாம் மறந்துவிடலாகாது. நாட்டைப் பிரித்தவர்கள் என்கிற குற்றச் சுமையை முஸ்லிம்கள் மீது சுமத்தி அவர்களை எந்த நியாயமான கோரிக்கைகளையும் முன்வைக்க இயலாதவர்களாக ஆக்கினார். வெறும் நான்கு முஸ்லிம் உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்ட ஆலோசனைக் குழு கூட்டத்தில் முஸ்லிம்கள் குறித்த இறுதி முடிவெடுக்கும் நோக்கத்தைப் பற்றி அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸன்ட் சர்ச்சில் சொன்னார், ''180 இந்து உறுப்பினர்களில் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முஸ்லிம் உறுப்பினர்களின் இறுதி முடிவின்போது 4 உறுப்பினர்கள் மட்டுமே பங்கு கொண்டனர் என்பது மணப்பெண் இல்லாமல் திருமணம் நடந்தது போன்ற கதையாக இருக்கிறது''.

இறுதியாக 1949 அக்டோபர் 14 அன்று மீண்டும் அரசியல் சட்ட அவை இப்பிரச்சனையை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது. முதலில் எடுக்கப்பட்ட முடிவுகளில் (ஆகஸ்டு 27, 1947) தொகுதி ஒதுக்கீடு மட்டுமே பின்னர் (மே 27, 1949) மறுக்கப்பட்டது. அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு செய்வதற்கு அரசியல் சட்டத்தில் ஆவன செய்ய வேண்டும் என்கிற முடிவு மாற்றப்படவில்லை. எனவே அதற்கான வழிமுறைகளைச் செய்ய வேண்டும் என்கிற நூறு சதம் நியாயமான கோரிக்கையை சர்தார் பொபிந்தர்சிங் மானும், நஸீருத்தீன் அஹமதும் முன்மொழிந்தனர். இதற்கான அரசியல் சட்டத்தின் 296, 299 பிரிவுகளில் உரிய மாற்றங்கள் செய்ய வேண்டும் என சர்தார் ஹுக்கும்சிங் கோரினார். பொபிந்தர்சிங் மான் முன்மொழிந்த 63ஆவது திருத்தம் அரசுப் பணிகளிலும் சட்டமன்றங்களிலும் சிறுபான்மையினருக்கு உரிய இடம் அளிக்கப்படு கிறதா எனக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மத்தியிலும் மாநிலங்களிலும் சிறுபான்மையினருக்கான அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் எனக் கோரியது. ஆகஸ்டு 1947க்கும், மே 1949க்கும் இடைப் பட்ட இரண்டு ஆண்டு இடைவெளியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தம் (அதாவது ஒதுக்கீடு தேவையில்லை என்பது) சிறுபான்மை யினரின் இருப்பையே மறுப்பதாக ஆகிவிடக்கூடாது என்றும் அவர் கவலை தெரிவித்தார். எனினும் அவரது இந்தத் தீர்மானமும் அவையால் நிராகரிக்கப்பட்டது.



முஸ்லிம்கள் திருப்தியுறவில்லை எனத் தனக்குத் தெரிவதாகவும், ஆனால் அதற்குக் காங்கிரஸ் பொறுப்பில்லை எனவும் நாட்டுப் பிரிவினை நடைபெறாதிருந்தால் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்த்திருக்கலாம் எனவும் பிரிவினைக்குப் பின் மீண்டும் பிரச்சினைகளை அதிகரிக்க வேண்டாம் எனவும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு விஷயத்தை விட்டுக் கொடுப்பதால் நீங்கள் வருந்துவதற்கு ஏதுமில்லை எனவும் உங்கள் நன்மைகளுக்காகவும் நாட்டு நன்மைகளுக்காகவும் ஒதுக்கீடு கோரிக்கை களை விட்டுப் கொடுப்பதன் மூலம் எங்களுக்கு உதவி செய்யுங்கள் எனவும் சர்தார் படேல் முஸ்லிம்களைக் கேட்டுக்கொண்டார்.

1909 முதல் முஸ்லிம்கள் அனுபவித்து வந்த உரிமைகள் சுதந்திர இந்தியாவில் மறுக்கப்பட்ட வரலாறு இதுதான். மீண்டும் இட ஒதுக்கீடு கோரிக்கையை முன் வைக்க முஸ்லிம்களுக்கு 54 ஆண்டுகள் தேவை யாயிருந்தன. இன்று கூட அரசுப் பணிகளில் மட்டும் தான் ஒதுக்கீடு வேண்டும் எனக் கோர முடிகிறதே ஒழிய சட்ட - பாராளுமன்றங்களில் ஒதுக்கீடு வேண்டும் என்ற குரலை எழுப்ப இயலவில்லை.

## பின்னிணைப்பு: ஆந்திர உயர்நீதிமன்றத் தீர்ப்பு சொல்வதென்ன?

ஜுலை 12-ந்தேதி அன்று ஆந்திர அரசு முஸ்லிம்களுக்கு 5% இட ஒதுக்கீடு அளித்து வெளியிட்ட ஆணையை (G.O. No.33) ஆந்திர உயர்நீதி மன்றம் செல்லாது என அறிவித்துள்ளது. நீதிபதி பி. சுதர்ஷன் ரெட்டி தலைமையிலான 5 பேர் கொண்ட பெஞ்ச் வழங்கியுள்ள தீர்ப்பின் (Sept. 21, 2004) இதர முக்கிய அம்சங்களாவன :

1. மேற்கண்ட ஆணை சிறுபான்மை ஆணைய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது முறையானதல்ல.

2. பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தைக் கலந்து முடிவு செய்ய வேண்டும் என்ற கடப்பாடு (Mandate) நிறைவேற்றப்படவில்லை.

3. மூன்று மாதத்திற்குள் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்து சிறுபான்மையினருள் ஒதுக்கீட்டுக்குத் தகுதியானவர்களைக் கண்டறிய வேண்டும்.

4. ஒதுக்கப்பட்டவர்களின் மேல் தட்டினரை (creamy layer) அடையாளம் கண்டு அவர்களுக்கு ஒதுக்கீட்டை மறுப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

5. மொத்த இட ஒதுக்கீடு 50 சதவீதத்தைத் தாண்டக்கூடாது என்கிற உச்சநீதிமன்றத் தீர்ப்பு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆந்திர அரசு இத்தீர்ப்பிற்கு எதிராக உச்சநீதிமன்றத்திற்குச் செல்வதில்லை எனவும் முஸ்லிம்களில் மேல் தட்டினரை அடையாளம் காண்பதற்கு அமைச்சரவைக் குழு ஒன்றையும், நீதிமன்ற ஆணைப்படி பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஒன்றையும் நியமித்து 'முறைப்படி' முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்குவது எனவும் அறிவித் துள்ளது. நீதிமன்றத் தடையின் விளைவாக நடப்புக் கல்வி ஆண்டில் இந்த ஆணை அமலுக்கு வராததால் மருத்துவப் படிப்பில் 119 இடங்களும் பல் மருத்துவத்தில் 42 இடங்களும் பொறியியலில் 3422 இடங்களும் எம்.பி.ஏ.வில் 607 இடங்களும், பி.எட்.டில் 1697 இடங்களும் முஸ்லிம்களுக்கு இழப்பு எனவும் ஆந்திர அரசு கூறியுள்ளது (இந்து, செப்டம்பர் 23). மேற்கண்ட தீர்ப்பு குறித்து 'மத அடிப்படையில் இட ஒதுக்கீடு செல்லாது - ஆந்திர உயர்நீதிமன்றம்' எனத் 'தினமணி' போன்ற இதழ்கள் விளம்பரங்கள் செய்துள்ளன. இது முற்றிலும் தவறு. அரசியல்



சட்டத்தின்படி மத அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதே உண்மை. இந்த அதிகாரத்தை வழங்கும் 15(4) மற்றும் 16(4) பிரிவுகள் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கெனவே கொண்டு வரப்பட்டவை. எனினும் அரசியல் சட்ட அவையில் இருந்த படேல், ராஜாஜி, முன்ஷி போன் றோரால் 'சிறுபான்மை' என்கிற சொல் நீக்கப்பட்டு 'வகுப்புகள்' என்ற சொல் புகுத்தப்பட்டது. 'சிறுபான்மையினர்' என்கிற சொல்லும் அத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் எனச் சிறுபான்மை உறுப்பினர்கள் கேட்ட போது, 'வகுப்புகள்' என்றால் சிறுபான்மையினரையும் உள்ளடக்கும் என்று உறுதிமொழி அளிக்கப்பட்டது. நீதியரசர் வெங்கடாசலையா தலைமையிலான மூவர் கொண்ட உச்சநீதிமன்ற பெஞ்ச் ஒன்றும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. வாஜ்பேயி அரசால் நியமிக்கப்பட்ட அரசியல் சட்ட மறு ஆய்வுக் குழு (NCWRC) முன் பேராசிரியர் இக்பால் அன்சாரி போன்றோர் சமர்ப்பித்த விரிவான அறிக்கைகளின் அடிப்படையில் அக்குழுவும் தனது பரிந்துரைகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்கிற அடிப்படையில் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதை ஏற்றுக் கொண்டுள்ளது (பார்க்க: அறிக்கை பத்தி எண்.3-7-1).

எனவே மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு உண்டு. இல்லை எனச் சொல்வது விஷமப் பிரச்சாரம். பிற மாநிலங்களிலும் இத்தகைய இட ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளன. கேரளாவில் 12 சதமும் கர்நாடகாவில் 4 சதமும் முஸ்லிம் களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பிற்படுத்தப் பட்டவர்களுக்கான 30 சத இட ஒதுக்கீட்டில் சில முஸ்லிம் பிரிவுகளும் அடங்கும். 1992-ம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின்படி எந்த ஒரு பிரிவையும் பிற்படுத்தப்பட்டப் பட்டியலில் சேர்க்க வேண்டுமெனில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையத்தின் அனுமதி பெற வேண்டும். பிற்படுத்தப்பட்ட சாதிப் பட்டியலில் இடம்பெறுகிற அடிப்படையில் மட்டுமே சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு அளிப்பது என்பது அரசியல் சட்ட அவையில் 'தொனிக்கு' எதிராக உள்ளது. முஸ்லிம்கள் உரிய அளவில் அரசுப் பணிகளில் இடம்பெறவில்லை என அரசு கருது மானால் அந்த அடிப்படையிலேயே அது இட ஒதுக்கீடு அளிக்கலாம். உச்சநீதிமன்றத் தீர்ப்பு இந்த உண்மையைக் கணக்கில் கொள்ளவில்லை.

தமிழ்நாட்டில் உள்ளது போல ஆந்திராவில் பிற்படுத்தப்பட்டோர் ஆணைய அறிக்கை ஏதும் கிடையாது. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட 'புட்டு சாமி ஆணையம்' அறிக்கை சமர்ப்பிக்காமலேயே காலாவதி யானது. இந்நிலையில் ஆந்திர மாநில முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பது குறித்து 'சிறுபான்மையினர் நிதி வாரியம்' மற்றும் 'மாவட்ட சிறுபான்மை நல அதிகாரிகள்' ஆகியோர் இணைந்து மேற்கொண்ட 'சர்வே' ஒன்றின் அடிப்படையில் சிறுபான்மை நல ஆணையர் சென்ற ஜுலை 5-ம் தேதி அன்று அறிக்கை ஒன்றை ஆந்திரப் பிரதேச அரசின்

முன் அளித்தார். இதன்படி ஆந்திராவில் முஸ்லிம்கள் 8.5 சதம் உள்ளனர். இதில் 6.5 சத முஸ்லிம்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர். கல்வி அறிவு வீதம் 18 சதம். முஸ்லிம் பெண்களின் கல்வி அறிவு வீதம் வெறும் 4 சதம். இந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படை யிலேயே ஆந்திர அரசு இட ஒதுக்கீடு ஆணையை வெளியிட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் அங்கு ஏற்கனவே A,B,C,D என நான்கு பிரிவுகள் உள்ளன. அவற்றோடு முஸ்லிம்களை 'E' பிரிவாக்கி 5 சத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

முஸ்லிம்களில் மேல் தட்டினர் மிகச் சொற்பம். எனவே அவர்களை அடையாளம் காண்பதற்கு தனி முயற்சிகள் தேவையில்லை. பிற மாநிலங்களிலும் மத்தியிலும் உள்ளது போல 2.5 லட்சம் அல்லது 3.5 லட்சம் என ஆண்டு வருமான உச்சவரம்பு அறிவித்தால் போதுமானது. எனினும் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அனைத்தும் முஸ்லிம் களைக் கொண்டே நிரப்பப்படுதல் அவசியம்.

ஏற்கனவே ஆந்திர மாநிலத்தில் 46 சதம் இட ஒதுக்கீடு வழங்கப் படுகிறது. இந்த 5 சதத்தையும் சேர்த்தால் 51 சதம் ஆகிறது. இது உயர்நீதிமன்ற உச்ச வரம்பு (50 சதம்)க்கு அதிகமாக உள்ளது. இந்த அடிப்படையில் ஆந்திர அரசு முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டை 5 சதத்திலிருந்து குறைத்துவிடக் கூடாது. தமிழ்நாட்டில் 69 சதம் வரை இட ஒதுக்கீடு அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சட்டமன்றத்தைக் கூட்டி உரிய சட்டம் இயற்றி, அரசியல் சட்டத்தில் ஒன்பதாவது ஷெட்யூலில் முஸ்லிம்களை இணைப்பதன் மூலம் இந்தத் தடையைக் கடக்கலாம். முஸ்லிம்கள் விழிப்புடன் செயல்பட வேண்டிய தருணம் இது.

பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு மட்டும் இட ஒதுக்கீடு அளித்தால் போதுமானது என்கிற குரலை பிற்படுத்தப்பட்ட இந்திய முஸ்லிம்கள் அமைப்புத் தலைவர்கள் ஷபீப் அன்சாரி, எய்ஜாஸ் அலி போன்றோர் ஒலித்து வருகின்றனர். முஸ்லிம்களுக்குள் அஷ்ரஃப், அஜ்லஃப் என இரு பிரிவுகள் உள்ளன என இவர்கள் வாதிடுகின்றனர். இந்துத்துவ வாதிகள் இத்தகைய குரலைச் சாதகமாகப் பயன்படுத்தி விடும் ஆபத்து இருக்கிறது. 1909 முதல் சட்ட, பாராளுமன்றங்களிலும் அரசுப் பணிகளிலும் முஸ்லிம்களுக்கு இருந்து வந்த ஒதுக்கீட்டை அரசியல் சட்ட அவையில் இருந்த முஸ்லிம்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளைக் கொண்டே இந்து தேசியவாதிகள் முறியடித்தனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஒன்றுபட்ட குரலில் முஸ்லிம்கள் தம் கருத்தை முன் வைக்க வேண்டிய தருணம் இது என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதிருக்கிறது. தேவையாயின் வருமான உச்சவரம்பு ஒன்றே போதுமானது.

**குறிப்புகள் :**

1. **நன்றி:** அரசியல் சட்ட அவையில் நடைபெற்ற விவாதங்கள் இங்கு சுருக்கியே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. விரிவுக்கு அரசியல் சட்ட அவை விவாதத் தொகுப்புகளைப் பார்க்கவும். ஷிவா ராவின் The Framing of Indian Constitution: Select Documents நூலும் ஏ.ஜி. நூரானியின் 'இந்திய முஸ்லிம்கள்' நூலும் இக்கட்டுரை ஆக்கத்திற்குப் பெரிதும் பயன்பட்டன.

2. **சில தகவல்கள்: (அ):** தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள 30 சத இட ஒதுக்கீட்டில் முஸ்லிம்களில் சில பிரிவினர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். கேரளத்தின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்கள் 22 சதம். இங்கே முஸ்லிம்களுக்கு 12 சத ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் 12 சத முஸ்லிம்களுக்கு இங்கே 4 சத ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) :** 1990ம் ஆண்டு 'தேசிய சாம்பிள் சர்வே'யின் அறிக்கையின்படி மற்ற மதத்தினருடன் ஒப்பிடும்போது முஸ்லிம்கள் மத்தியில் வேலை இல்லாமை அதிகமாக உள்ளது. நிலவுடைமை, விவசாயம் முதலியனவும் முஸ்லிம்கள் மத்தியில் குறைவு. மாதம் ரூ.425க்கும் குறைவான மதிப்புள்ள பொருட்களை மட்டுமே நுகரும் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுள்ளும் கூட முஸ்லிம்களே அதிகம். கிறிஸ்தவர்களில் 13 சதமும், இந்துக்களில் 22 சதமும், முஸ்லிம்களில் 40 சதமும் இந்நிலையில் உள்ளனர். இது நகர்ப்புறத்திற்கான புள்ளி விவரம்தான் எனினும் கிராமப்புறங்களிலும் இதுவே நிலை. தொழில் நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளில் முஸ்லிம்கள் மற்றும் தலித்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதை இன்னொரு அறிக்கை கூறுகிறது. **தனியார் துறையில் இடஒதுக்கீடு என்கிற கோரிக்கையிலும் முஸ்லிம்கள் தனிப்பிரிவாக உள்ளடக்கப்படுதல் அவசியம்.**

## கருப்புப் பிரதிகளில்... அ. மார்க்ஸ்

| | | |
|---|---|---|
| 1) | இந்துத்துவத்தின் இருள்வெளிகள் | ரூ.55.00 |
| 2) | கடமை அறியோம் தொழிலறியோம் | ரூ.60.00 |
| 3) | அதிகாரத்தை நோக்கி உண்மைகளைப் பேசுவோம் | ரூ.45.00 |
| 4) | சொல்வதால் வாழ்கிறேன் | ரூ.50.00 |
| 5) | பாடநூல்களில் பாசிசம்: வெறுப்பை விதைக்கும் வரலாற்றுப் பாடங்கள் | ரூ.20.00 |
| 6) | இஸ்லாமியருக்கெதிரான கட்டுக்கதைகள் | ரூ.15.00 |
| 7) | இலக்கியத்தில் இந்துத்துவம்: காலச்சுவடின் ஆள்காட்டி அரசியல் | ரூ.15.00 |
| 8) | சாவர்க்கரும் காந்தியும் | (அச்சில்) |
| 9) | புத்தம் சரணம் | (அச்சில்) |
| 10) | நான் புரிந்து கொண்ட நபிகள் | (அச்சில்) |

...1909 முதல் முஸ்லிம்களுக்கு இருந்து வந்த இரட்டை வாக்குரிமை, அரசுப்பணிகளில் ஒதுக்கீடு ஆகியவை அரசியல் சட்ட அவை விவாதங்களின் போது ஒழித்துக் கட்டப்பட்டன. முதலில் ஏற்றுக் கொண்ட தொகுதி ஒதுக்கீட்டையும் அரசியல் சட்டம் இறுதி வடிவெடுக்கும் போது மறுத்தனர். அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசியல் சட்டத்தில் வழி வகுக்கப்படும் என்கிற உறுதி மொழியையும் ஊத்தி மூடினர். அரசியல் சட்ட அவையில் விவாதம் என்கிற பெயரில் முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டனர். முஸ்லிம் உறுப்பினர்கள் தம் நியாயமான கோரிக்கைகளைக் கைவிடும் மன நிலைக்குத் தள்ளப்பட்டனர். நெஞ்சை நெகிழ்த்தும் இவ்வரலாற்றை சொல்கிறது இக்குறு நூல்...

கருப்புப் பிரதிகள்